வெளியீடு எண் 128.

# திருவேள்விக்குடித் திருப்பதிகங்கள்




சம்பந்தர்



சுந்தரர்

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உரு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண். 128.

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

# திருவேள்விக்குடித் திருப்பதிகங்கள்

இது

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம்

உடு-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளத்தின்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1947.

பிரதிகள் 500.

தருமபுர ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

குருபாதம்

# முன்னுரை

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்களின் ஜன்மநக்ஷத்திர திருநாட்களில் திருப்பாடல் பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கி வருதல்போல இம்மாதத்திலும் 9-3-47 அன்று திருவேள்விக்குடி ஸ்ரீ கல்யாண சுந்தரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து தலப்பதிகங்கள் அடங்கிய இவ்வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

உ

குருபாதம்

# ஸ்ரீ கல்யாணசுந்தரர் தோத்திரம்

வரிக்குழன் மகளை மன்னவன் மகிழ்ந்து
வாழ்ந்திட மணமுடித் தவனே
அரிஅயன் புகழ்வேள் விக்குடி அமரும்
அப்பனே அன்னையே அரசே
பரிமள சுகந்த நாயகி மணந்த
பண்ப கல்யாண சுந்தரனே
திரிபுரம் எரித்த சோதியே ஆள்வாய்
செல்வமே கருணை வாரிதியே.

உ

சிவமயம்

# தலச்சிறப்பு

சைவசமய பரமாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகங்கள்பெற்ற சிவஸ்தலங்கள் 274-ல் **திருவேள்விக்குடி** என்னும் இத்தலம் இருபத்துமூன்றுவதாக எண்ணப்பட்டிருக்கிறது. திருஞானசம்பந்த சுவாமிகள் பாடிய திருப்பதிகம் ஒன்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருப்பதிகம் ஒன்றும் ஆக இரண்டு திருப்பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளதாகக் காணப்படுகின்றன. திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய தனிப்பதிகம் இல்லையாயினும் க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் இத்தலப் பெயரைக் குறிப்பிட்டுள்ளார். இறைவர் திருநாம் **ஸ்ரீகலியாணசுந்தரர்.** இறைவி **பரிமளசுகந்த நாயகி.** தஞ்சை ஜில்லா மாயூரந்தாலுக்கா குத்தாலம் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே மூன்றுகல் தொலைவில் இத்தலம் விளங்குகிறது.

# திருப்பதிகப் பொழிப்புரை

சம்பந்தர் பதிகம்:

*1. மிகுதியும் பொங்கியெழுந்து சுழன்று ஆரவாரிக்கின்ற கங்காநதியை ஒப்பற்ற சடாபாரத்தின்மேல் தாங்கியும் பிரமதேவரது தலையையே இடுபலி ஏற்கும் கலனாயுங் கொண்ட நமது அடிகள், அழகுற உமையோடு பகற்காலத்தில் பொழில்மிக்கு நீர் சூழ்ந்து விளங்கும் துருத்தியென்னும் தலத்தும், இராக்காலத்து வேள்விக்குடி என்னும் தலத்தும் உறைவராவர்; துருத்தியென்பது பேராற்றிற்கு நடுவண் உள்ள இடம் என்று கூறுவர். இப்போது இத்தலம் குத்தாலம் என வழங்கப்படுகிறது.*

*2. முட்செடி சூழ்ந்திருக்கும் மயானத்தில் சுடர்விடுகின்ற அங்கியைத் தாங்கியாடுவர்; மிக்க விளக்கமுடைய திருநீற்றையே பூசு சாந்தாகக் கொள்வர்; குளிர்ச்சியுடைய*

பிறைத்திங்கள் பொருந்திய சடையுமுடையர்; களபசாந்து பூசப்பெற்ற முற்று விளமுலையை யுடைய உமையம்மையாரோடு (ஒருபகல்) நடுப்பகல், அஃதாவது உச்சிப்போதில் துருத்தியில் உறைவர்; இரவில் வேள்விக்குடியில் உறைவர்.

3. பரந்த மேகங்களோடும் பொருந்தியுலாவுகின்ற பிறைச்சந்திரனோடு கொன்றைமலரும் வெண்டலையும் விளங்கும் நீண்ட சடாபாரத்தின்மேல் கங்காநதியையும் புகும்படிசெய்த எமது நுதற்கண் காபாலியாகிய இறைவன், அரதனக்கோவைகளும் பட்டாடையும் தோய்ந்து துயல்வருகின்ற அல்குலையுடைய அம்மையாரோடு நடுப்பகல் துருத்தியிடத்துறைவர்; இரவில் வேள்விக்குடியில் உறைவர்.

4. கரும்புவிற் காளையாகிய மன்மதனை நீறெழச்செய்து வண்டு மொய்த்துத்தேனொழுகும் கொன்றைப்பூ வணிந்த சடைமுடிப்

பெருமான், அரும்புபோலும் அழகிய பயோதரங்களையுடைய அம்மையாரோடும் நண்பகலில் துருத்தியில் உறைவர்; இரவில் வேள்விக்குடியில் உறைவர்.

5. வளம்மிக்க திங்களையும் பொன்போலும் கொன்றைப் பூவையும் கொடிய அரவையும் இடம்பெறச் சடையிடை வைத்த எம்முடைய நுதற்கண் காபாலியார் முப்புரிநூல் பூண்ட மார்பையும் உடையாராய், உமாதேவியாரோடும் நடுப்பகல் துருத்தியில் உறைவர்; இராவிடத்து வேள்விக்குடியில் எழுந்தருளியிருப்பர்.

6. புள்ளிகள் மிக்க கொலைத்தொழிற் புலித்தோற் போர்வையர்; வரிகளையுடைய அராப்பூண்டிலங்குவர்; பற்றற்ற நன்னெறியீதாமென்று ஐயம் ஏற்று உண்ணும் தன்மையுமுடையார்; எவரும் அறியவொண்ணாத சீலமுடையவர்; வேள்விக்கண்ணெழுந்த

மானையுங் கரத்தில் உடையவர்; இத்தகைய இவர் நண்பகலில் அம்மையோடு துருத்தியில் உறைவர். இராக்காலத்து வேள்விக்குடியில் உறைவர்.

7. புரிவுடைய நீண்ட சடையுடையார்; புலித்தோலை அரையில் ஆர்த்தவர்; வெண்பொடி பூசித் திரிகின்ற இயல்பையுமுடையார், மும்மதில்களையுந் தீயெழச்செய்தவர்; கச்சு அணிந்த கொங்கைகளையுடைய மங்கையோடு நண்பகல் துருத்தியில் அமர்ந்தருளுவர்; இரவிடத்து வேள்விக்குடியில் உறைவர்,

8. மிக்க சேய்மைக்கண்ணும் ஒளிவீசுகின்ற கிரீடங்களைத் தாங்கிய அரக்கன், உயர்ந்தோங்கு கயிலையை எடுப்பல் என்று எழுந்தபோது, அம்மலைக்கீழ்வைத்தடர்த்தே அவனது முழுப்பழிக்கீழ்ப்படுத்தவர்; மலைமங்கையாகிய உமாதேவியாரோடும் நண்பகலில் துருத்தியில் உறைவர்; வேள்விக்குடியில் இராவிடத்து உறைவர்.

9. கரைமோதுகின்ற கடலிடைத்துயின்ற கடவுளாகிய திருமாலும், தாமரையின்கண் வசிக்கும் பிரமனும், வீரக்கழல் அணிந்த அடிகளைத்தொழும்படி, மிக்கஎரியுருவாயதிரு மேனிகொண்ட பெருமான் மலைமகளாகிய உமாதேவியாரோடு பகலிடம் உறைவர் துருத்தியில்; இரவிடத்துறைவர் வேள்விக்குடியில்.

10. உருக்குப்படியான கொடிய வெயிலில் நிற்கின்ற இயல்பையுடைய அமணரும் குண்டரும் சாக்கியரும் நயம்படப்பேசும் திறமையுடையவர்; கேட்டார் நகைப்பெய்தவும் செய்வர் ஆதலின் அவருரை கேளாதீர். நீண்டு செவ்வரிபடர்ந்த கயல்மீன்போன்ற கண்களையுடைய அம்மையாரோடும் பகற் காலத்து உறைவர் துருத்தியில்; வேள்விக் குடியில் இராவிடத்துறைவர். இத்தகைய பெருமானை எல்லீரும் வாழ்த்தி வணங்கி உய்வீர்களாக.

11 விண்ணளவும் உலாவுகின்ற விரிந்த பொழில்களை யுடையதாயும் வாசனைமிக்க வெண்மணற் பரப்பினதாயு முள்ள துருத்தியும் வேள்விக்குடியும் ஒளிமிக்க வீரக்கழலணிந்து ஆடுவானாகிய நம்மிறைவன் அம்மையோடு உறைகின்றபதியாதலால், நேயமிக்க சீகாழிப்பதியில் வந்த அருமறைகற்ற திருஞானசம்பந்தன் பண்ணொடு பொருந்திப் பாடிய அரியதமிழ்ப்பாவினை அன்போடு பாடி ஆடுகின்றவர் யாதொரு பழியும் இல்லாதவர் ஆவர்.

## சுந்தரர் பதிகம்:

1. எம்பெருமானாகிய இறைவன் மூப்படைவதுமில்லை இறந்துபடுவதுமில்லை ஆதலால் பிறப்பதுமில்லை; தான் வாழ்க்கை விரும்புவது காட்டினிடத்தும் காடுசேர்ந்த ஊரினிடத்தும்; காவலாய்க்கொள்வது வேள்விக்குடியும் துருத்தியும்; தலையில் தரிப்பது பாம்பாகும்;

இவ்வாறு இருப்பதை அறிந்தால் நாம் ஆட்பட்டிருக்க மாட்டோம். சிந்திக்கி நல்லால் என்றிருப்பதால் உள்கி உணர்வார்க்கு ஆட்படச்செய்யும் என்பதாம். இப்பதிகத்துக் கடைக்காப்பில் ஆட்படுமாறு சொல்லிப் பாடிய என்றிருத்தலால் இவ்வாறுஉள்ளுறை காணப்பட்டது.

2. மிகக்கொடுமையான காட்டின்கண்ணும் கூத்துகப்பர்; யாவருக்குங் காண ஒண்ணார்; சுட்ட வெண்ணீறும் பூசுவர்; பாடலும் ஆடலும் இயற்றுவர்; வட்டமாக அங்குக் குண்டமமைத்து அதில் பரிசுத்தமான நெய்யும் பாலும் வார்ப்பர்; மறையும் பாடுவர்; எனினும் ஐயம் ஏற்றுண்பது இயல்பாக உள்ளதுபோலும். இவ்வாறு இவர் பண்பாமென அறிந்தோமாகில் இவர்க்கு ஆட்பட்டிருக்கமாட்டோம்.

3. ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருநாமங்களுடையார்; பெண்ணென்று ஆணென்று

அலியென்று கூறவொண்ணுது திருவொற்றி யூர் வாழ்க்கை நமதென்பர்; மற்றை யூரும் பலவுள என்பர்; ஆனுல் அஃதை நாமறியோம். மற்றும் கரிய கடல்தந்த நஞ்சுண்டிருண்ட கண்டத்தர்; ஆரமும் பாம்புகள்; இவ்வாறு யது இவர் பண்பென நாம் அறிந்திருந்தால் இவர்க்கு ஆட்பட்டிருக்க மாட்டோம்.

4. பன்றிக்கொம்பும் இள ஆமையும் பூண்டுகொண்டு ஒரு எருதின்மேல் ஏறிப் பெருங்காட்டில் அடியார்கள் பலபல சொல்லி விரும்பித்தொடர மான்தோல் ஒன்று உடுத்து யானைத்தோல் போர்த்து, புலித் தோலைத் தோள்மேல் தொங்கவிட்டுச் செல்லும் இயல்பை அறிந்திருந்தால் நாம் இவர்க்கு ஆட்பட்டிருக்க மாட்டோம்.

5. ஊரார் இடும் பிச்சையேயன்றித் தம் மிடத்துவருவோரை உண்பித்துத் தாமுண் ணும் உணவு இல்லாதவர். எருதையும் அலங்கரித்துக் கொண்டேறுவர்; பல பூதங்

களும் உண்டு புறஞ்சூழ்வரச்சென்று ஊர் தோறும் பல பல பாம்புகள் பிடித்து ஆட்டி விளையாடி உண்ணும் இயல்புடையார்; இது இவரியல்பு என்று அறிந்திருந்தால் இவர்க்கு நாம் ஆட்பட்டிருக்கமாட்டோம்.

6. குரவர் மகளுடைய மணவாளர் இவருடைய திருமைந்தராகிய முருகவேளாகும். தான் பெரியதோர் வேடனாய் காட்டில் பன்றியின்பின் செல்வதுபெரியதோர் மாயம். அது தெளியவொண்ணாதபடி தலைவராகவும் இருப்பர்; எவற்றிற்கும் முதன்மையார்; சோதிமயமாயுள்ளவர்; இவ்வாறாக யாதொரு சோர்வுமில்லாத தருமமூர்த்தியு மாகுவர். இவ்வாறு இவர் ஆவதறிந்தோமேல் இவர்க் காட்பட்டிருக்க மாட்டோம்.

7. பித்தரை யொத்த பெற்றியராய்க் காணப்படுவர்; எனது நற்றாய்க்கும் எனது பாட்டிக்கும் எனது மனைவிக்கும் எனது தந்தைக்கும் தானே தலைவராம்; இறந்தாரது


தலையோடே பலிப்பாத்திரமாகக் கருதும் கருத்தறிந்திருந்தால் இவர்க்கு நாம் ஆட்பட்டிருக்கமாட்டோம்.

8. இந்திரன், உருத்திரன், திருமால், பிரமன் முதலியோரும் தற்போதமற்றுச் சிந்தித்தால் அவரது தடுமாற்றந் தீர்த்தருள்வர்; யான் அறியும் தரத்தர் அல்லராகிலும் என் நெஞ்சத்திருப்பார்; மேலும் ஞான ஆகாயமே இடமாகக் கூத்துகந்து செல்லும் இயல்புடையார் என்பதை அறிந்தால் நாம் ஆட்பட்டு இருக்கமாட்டோம்.

9. இந்திரனுக்கும் இராவணனுக்கும் குற்றம் நீக்கிக் குணங்கொண்டு அருள் புரிந்தார்; மந்திரங்களும் ஓதி மாமறையும் பாடி வெளிப்படுப்பார்; மான் தாங்கிய கரத்தர்; திருமாலும் பிரமனும் தன்னுடன் பிரியாது வர அந்தரமார்க்கம் செல்லும் இவரது இயல்பை அறிந்திருந்தால் இவர்க்காட்பட்டிருக்க மாட்டேம். இவ்விருவரும் தன்னுடன்

பிரிவில்லாத காரணராயுள்ளவர். இவற்றை "வெளிவந்த மாலயனும் காணாத வேதியன்" என்று காரியக்கடவுளரை வேறு பிரித்துக் காணும் பெற்றியைத் திருவாசகத்திற் காண்க.

10. சாராதவரைச்சாராதஉயர்குலத்துவந்த திருநாவலூர்த் தலைவன் பாடிய நல்லதமிழ்ப் பாடலை அன்போடு பாடுகின்ற பரமனடி யார்க்கடிமை வழுவாதவராய் யாரும் விரும் பத்தக்க நல்ல வன்றொண்டனும் ஆரூரன் என்ற இயற்பெயருடையானுமாய சுந்தரன் ஆட்படுமாறு சொல்லிப்பாடிய இப்பாடல் களைப் பாடவல்லவர் பரலோகத்தில் வாழ்வு பெறுவது மிக எளிது; அரியதொன்றன்று.





சிவமயம்

# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

பண் — சாதாரி.

திருச்சிற்றம்பலம்

ஓங்கிமே லுழிதரு மொலிபுனற்
கங்கையை யொருசடைமேல்
தாங்கினா ரிடுபலி தலைகல
னாக்கொண்ட தம்மடிகள்
பாங்கினா லுமையொடும் பகலிடம்
புகலிடம் பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த் துருத்தியா ரிரவிடத்
துறைவர் வேள்விக்குடியே. க

தூறுசேர் சுடலையிற் சுடரெரி
யாடுவர் துளங்கொளிசேர்
நீறுசாந் தெனவுகந் தணிவர்வெண்
பிறைபுல்கு சடைமுடியார்
நாறுசாந் திளமுலை யரிவையோ
டொருபக லமர்ந்தபிரான்
வீறுசேர் துருத்தியா ரிரவிடத்
துறைவர் வேள்விக்குடியே. உ

மழைவள ரிளமதி மலரொடு
தலைபுல்கு வார்சடைமேல்
கழைவளர் புனல்புகக் கண்டவெங்
கண்ணுதற் கபாலியார்தாம்
இழைவளர் துகிலல்கு லரிவையோ
டொருபக லமர்ந்தபிரான்
விழைவளர் துருத்தியா ரிரவிடத்
துறைவர் வேள்விக்குடியே. ௩

கரும்பன வரிசிலைப் பெருந்தகைக்
காமனைக் கவினழித்த
சுரும்பொடு தேன்மல்கு தூமலர்க்
கொன்றையுஞ் சுடர்ச்சடையார்
அரும்பன வனமுலை யரிவையோ
டொருபக லமர்ந்தபிரான்
விரும்பிடந் துருத்தியா ரிரவிடத்
துறைவர் வேள்விக்குடியே. ௪



வளங்கிளர் மதியமும் பொன்மலர்க்
கொன்றையும் வாளரவும்
களங்கொளச் சடையிடை வைத்தவெங்
கண்ணுதற் கபாலியார்தாம்
துளங்குநூன் மார்பின ரரிவையோ
டொருபக லமர்ந்தபிரான்
விளங்குநீர்த் துருத்தியா ரிரவிடத்
துறைவர் வேள்விக்குடியே. ௫

பொறியுலா மடுபுலி யுரிவையர்
வரியராப் பூண்டிலங்கும்
நெறியுலாம் பலிகொளு நீர்மையர்
சீர்மையை நினைப்பரியார்
மறியுலாங் கையினர் மங்கையோ
டொருபக லமர்ந்தபிரான்
வெறியுலாந் துருத்தியா ரிரவிடத்
துறைவர் வேள்விக்குடியே. ௬

புரிதரு சடையினர் புலியுரி
யரையினர் பொடியணிந்து
திரிதரு மியல்பினர் திரிபுர
மூன்றையுந் தீவளைத்தார்
வரிதரு வனமுலை மங்கையோ
டொருபக லமர்ந்தபிரான்
விரிதரு துருத்தியா ரிரவிடத்
துறைவர் வேள்விக்குடியே. ௭

நீண்டிலங் கவிரொளி நெடுமுடி
யரக்கனிந் நீள்வரையைக்
கீண்டிடந் திடுவனென் றெழுந்தவ
னுள்வினை கீழ்ப்படுத்தார்
பூண்டநூன் மரர்பின ரரிவையோ
டொருபாக லமர்ந்தபிரான்
வேண்டிடந் துருத்தியா ரிரவிடத்
துறைவர் வேள்விக்குடியே. ௮

கரைகட லரவணைக் கடவுளுந்
தாமரை நான்முகனும்
குரைகழ லடிதொழக் கூரெரி
யெனநிறங் கொண்டபிரான்
வரைகெழு மகளொடும் பகலிடம்
புகலிடம் வண்பொழில்சூழ்
விரைகமழ் துருத்தியா ரிரவிடத்
துறைவர் வேள்விக்குடியே. ௯

அயமுக வெயினிலை யமணருங்
குண்டருஞ் சாக்கியரும்
நயமுக ருரையினர் நகுவன
சரிதைகள் செய்துழல்வார்
கயலன வரிநடுங் கண்ணியோ
டொருபக லமர்ந்தபிரான்
வியனகர்த் துருத்தியா ரிரவிடத்
துறைவர் வேள்விக்குடியே. க0

விண்ணுலாம் விரிபொழில் விரைமணற்
றுருத்திவேள் விக்குடியும்
ஒண்ணுலா மொலிகழ லாடுவார்
அரிவையோ டுறைபதியை
நண்ணுலாம் புகலியு ளருமறை
ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணுலா மருந்தமிழ் பாடுவா
ராடுவார் பழியிலரே. கக

உ

சிவமயம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்



## பண் — நட்டராகம்

திருச்சிற்றம்பலம்



மூப்பது மில்லை பிறப்பது மில்லை
யிறப்ப தில்லைச்
சேர்ப்பது காட்டகத் தூரினு
மாகச்சிந் திக்கிலல்லால்
காப்பது வேள்விக் குடிதண்
டுருத்தியெங் கோனரைமேல்
ஆர்ப்பது நாகம றிந்தோமேல்
நாமிவர்க் காட்படோமே. க

கட்டக் காட்டின்னட மாடுவர்
யாவர்க்குங் காட்சியொண்ணார்
சுட்டவெண் ணீறணிந் தாடுவர்
பாடுவர் தூயநெய்யால்
வட்டக்குண் டத்தி லெரிவளர்த்
தோம்பி மறைபயில்வார்
அட்டக்கொண் டுண்ப தறிந்தோமேல்
நாமிவர்க் காட்படோமே. உ

பேருமோ ராயிரம் பேருடையார்
பெண்ணோ டாணுமல்லர்
ஊருமொற் றியூர் மற்றையூர்
பெற்றவா நாமறியோம்
காருங் கருங்கடல் நஞ்சமு
துண்டுகண் டங்கறுத்தார்க்
காரம்பாம் பாவ தறிந்தோமேல்
நாமிவர்க் காட்படோமே: ந

ஏனக்கொம் பும்மிள வாமையும்
பூண்டங்கோ ரேறுமேறிக்
கானக்காட் டிற்றொண்டர் கண்டன
சொல்லியுங் காமுறவே
மானைத்தோ லொன்றை யுடுத்துப்
புலித்தோல் பியற்குமிட்டு
யானைத்தோல் போர்ப்ப தறிந்தோமேல்
நாமிவர்க் காட்படோமே. ச

ஊட்டிக்கொண் டுண்பதோ ரூணிலர்
ஊரிடு பிச்சையல்லால்
பூட்டிக்கொண் டேற்றினை யேறுவர்
ஏறியோர் பூதந்தம்பால்
பாட்டிக்கொண் டுண்பவர் பாழிதொ
றும்பல பாம்புபற்றி
ஆட்டிக்கொண் டுண்ப தறிந்தோமேல்
நாமிவர்க் காட்படோமே. ரு

குறவனார் தம்மகள் தம்மகனார்மணா
வாட்டி கொல்லை
மறவனா ராயங்கோர் பன்றிப்பின்
போவது மாயங்கண்டோர்
இறைவனா ராதியார் சோதிய
ராயங்கோர் சோர்வுபடா
அறவனா ராவ தறிந்தோமேல்
நாமிவர்க் காட்படோமே. ௬

பித்தரை யொத்தொரு பெற்றியர்
நற்றவை யென்னைப்பெற்ற
முற்றவை தம்மனை தந்தைக்குந்
தவ்வைக்குந் தம்பிரானார்
செத்தவர் தந்தலை யிற்பலி
கொள்வதே செல்வமாகில்
அத்தவ மாவ தறிந்தோமேல்
நாமிவர்க் காட்படோமே. ௭

உம்பரா னூழியா னாழியா
னோங்கி மலருறைவான்
தம்பர மல்லவர் சிந்திப்ப
வர்தடு மாற்றறுப்பார்
எம்பர மல்லவ ரென்னெஞ்சத்
துள்ளு மிருப்பதாகில்
அம்பர மாவ தறிந்தோமேல்
நாமிவர்க் காட்பட்டோமே. அ

இந்திர னுக்குமி ராவண
னுக்கு மருள்புரிந்தார்
மந்திர மோதுவர் மாமறை
பாடுவர் மான்மறியர்
சிந்துரக் கண்ண னு நான்முக
னும்முட னாய்த்தனியே
அந்தரஞ் செல்வ தறிந்தோமேல
நாமிவர்க் காட்பட்டோமே. சு

கூடலர் மன்னன் குலநாவ
லூர்க்கோன் நலத்தமிழைப்
பாடவல்ல பர மன்னடி
யார்க்கடி மைவழுவா
நாடவல்ல தொண்ட ஞரூரன்
ஆட்படு மாறுசொல்லிப்
பாடவல்லார் பரலோகத்
திருப்பது பண்டமன்றே. ௧௦

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்

மண்ணிப் படிக்கரை வாழ்கொளி புத்தூர்
வக்கரை மந்தாரம் வார ணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி
விளமர் விராடபுரம் வேட்களத்தும்
பெண்ணை அருட்டுறை தண்பெண் ணாகடம்
பிரம்பில் பெரும்புலியூர் பெருவே ளூரும்
கண்ணை களர்க்காறை கழிப்பாலையும்
கயிலாய நாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்

—அப்பர்